பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

அன்பளிப்பு

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 16 ஞாயிற்றுக்கிழமை (31-12-1995) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 35

# ஈழத் தமிழர்களுக்காக தமிழக மக்கள் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும்

## தேசிய தலைவர் பிரபா வேண்டுகோள்

சாவகச்சேரி, டிசம்பர் 31


தமிழீழத்தில் தமிழின அழிப்புப் போரை தொடர்ந்து நடத்த சிங்கள இனவாத அரசு வெறிகொண்டு நிற்கிறது. இந்தச் சூழ்நிலையில், தமிழகம் எமக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும்; எமது மக்களின் நியாயமான பேராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

இன்றைய இக்கட்டான நிலையில் ஈழத் தமிழினம் இதனையே தமிழக மக்களிடமிருந்தும், தமிழகத் தலைவர்களிடமிருந்தும் எதிர் பார்த்து நிற்கின்றது.

— இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப் பிள்ளை பிரபாரகன் தமிழக மக்களுக்கு விடுத்துள்ள செய்தி ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

அந்தச் செய்தியின் முழு வடிவம் வருமாறு:-

சிங்கள இனவாத ஆட்சியாளரின் கொடுமையால், இன அழிப்பின் விளிம்பில் நின்று, விடுதலைக்காகப் போராடிவரும் ஈழத் தமிழினத்திற்காக உணர்வு பூர்வமாக உரிமைக் குரல் எழுப்பும் தமிழக மக்களுக்கும், தமிழகத் தலைவர்களுக்கும் எமது மககளின் சார்பில் அன்பையும், நன்றியையும் தெரிவிக்க விரும்புகிறேன்.



## தமிழகம் ஆர்ப்பரித்து எழுவதை காண எமக்கு உறுதி ஏற்படுகின்றது

ஈழத்தமிழருக்கு இன்னல் நிகழும் பொழுதெல்லாம் தமிழகத்திலிருந்து எழும் அனுதாப உணர்வலைகள் ஈவிரக்கமற்ற எமது எதிரிக்கு ஓர் அச்சுறுத்தலாக அமைவதுடன் நொந்து போயிருக்கும் எமது மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் தருகிறது. அத்துடன் ஈழத்தமிழினம் நிராதரவாகத் தனித்து நிற்கவில்லை என்ற உண்மையையும் உலகத்திற்கு எடுத்து இயம்புகிறது தமிழீழ மக்களின் இனப்பிரச்சினை பற்றியும், அவர்களது நியாயமான தேசியப் போராட்டம் பற்றியும், அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் புலிகள் பற்றியும் தவறான கருத்துக்களைத் தமிழக மக்கள் மனதில் விதைத்துவிட எத்தனையோ சக்திகள் எத்தனித்த போதும், அரசியலுக்கு அப்பால் நின்று, இன உணர்வின் அடிப்படையில், இரத்த உறவின் அடிப்படையில், மனிதாபிமான அடிப்படையில், எமது மக்களுக்காக நீதி கேட்டு தமிழகம் ஆர்ப்பரித்து எழுவதைக்காண எமக்கு ஊக்கமும், உறுதியும் ஏற்படுகின்றது.

## கொடூர இனக்கொலை வரலாற்றின் பூதாகர விரிவாக்கமே இந்தப் போர்

நீண்ட காலமாக, புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்பிருந்தே, தமிழீழத் தேசம் இரத்தம் சிந்தி வருகிறது. நீண்ட காலமாக எமது மண்ணில் இனக்கொலை நடந்து வருகிறது. இந்த நீண்ட, நாற்பது ஆண்டு கால இன ஒழிப்பு வரலாற்றில் எமது மொழி, பண்பாடு, எமது கல்வி, எமது பொருளாதார வாழ்வு என்ற ரீதியில் எமது தேசிய வாழ்விற்கு ஆதாரத் தூண்களாக நிற்கும் அனைத்துமே திட்டமிட்டு சிதைக்கப்பட்டு வந்துள்ளன. சிங்கள இனவாத பூதம் எமது தாயக மண்ணை படிப்படியாக ஏப்பம்விட்டு வருகிறது. வரலாற்றுப் புகழ் மிக்க எமது நகரங்களையும், பட்டினங்களையும் சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. பல லட்சம் மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து ஏதிலிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். இரத்தம் படிந்த இந்த சோக வரலாற்றில் நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் சாவைச் சந்தித்திருக்கிறார்கள். இந்தக் கொடூரமான இனக்கொலை வரலாற்றின் தொடர்ச்சியாகவும், பூதாகர விரிவாக்கமுமாகவே இன்றைய போர் நிகழ்ந்து வருகிறது.

## உண்மை நிலையை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளாதது வேதனையே!

வரலாற்று ரீதியாக ஈழத் தமிழினம் ஓர் அப்பட்டமான இன அழிப்பை எதிர் நோக்கி நிற்கிறது. தமிழரின் தேசிய அடையாளத்தைச் சிதைத்துவிடும் நோக்கில் மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு இந்த இன அழிப்பு நிகழ்கிறது. இதன் உண்மையான முகம் பிரச்சாரப் பொய்களால் மூடி மறைக்கப் பட்டிருக்கிறது. இதனைச் சர்வதேச சமூகம் இன்னும் புரிந்துகொள்ளாதது எமக்கு வேதனையையும், கவலையையும் தருகிறது.

தமிழின அழிப்பை அடிப்படையாகக் கொண்ட சிங்கள இனவாதத்தின் அடக்கு [illegible] அன்று தொட்டு இன்று வரை போராட்டங்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை மாநாட்டில் தலைவரின் செய்தி!

சென்னை, டிச 31

ஈழத்தமிழர் படுகொலை செய்யப்படுவதை கண்டித்தும் —

அவர்கள் சுதந்திரமாக வாழ வழி செய்யும் தீர்வை வலியுறுத்தியும் —

நேற்று சென்னையில் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார் என்று ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்த மாநாட்டுக்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார் (உ-3-7)

### ஈழத்தமிழருக்கு ஆதரவாக

## சர்வகட்சி மாநாடு தமிழ்நாட்டில் ஆரம்பம்

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து அனைத்துக் கட்சிகளின் மாநாடு ஒன்று நேற்றுச் சென்னையில் ஆரம்பமானது.

தமிழ் தேசிய இயக்கம், திராவிடர் கழகம் ஆகியன கூட்டாக ஏற்பாடு செய்த இந்த மாநாட்டில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-3-7)

### யாழ்ப்பாணத்தை கைவிட முடியாது

## புலிகளின் நிலைப்பாட்டை அரசு ஏற்றுக்கொள்ளாது

### பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, டிச. 31

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இனவிவகார நல்லிணக்க பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறியுள்ளார்.

எச்சந்தர்ப்பத்திலும் யாழ்ப்பாணத்தைக் கைவிட்டுச் செல்வதற்கு அரசு தயாராக இல்லை. —

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமானால் அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும். —

அவ்வாறு அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தாலுங்கூட யாழ்ப்பாணத்தைக் கைவிடத் தயாரில்லை —

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90-ம் நாள் நினைவலைகள்



தாயின் மடியில்: 14 - 08 - 1973
தாயக மண்ணில்: 03 - 10 - 1995

## லெப். கேசவன் - நீலவண்ணன்

(சிவபாக்கியநாதன் பாபு)

(வடலியடைப்பு - பண்டத்தரிப்பு)

கனவில் உன் முகம் தெரியுதடா
உன் கள்ளச் சிரிப்பு புரியுதடா!
நிஜத்தில் ஏனோ மறையுதடா
நிழலாய் நின்று உதவிடவோ?
அன்புக்கோர் குட்டிமகன்,
ஆசைக்கோர் குட்டித்தம்பி,
உருவில் ஏனோ உயர்ந்தவன் நீ,
உருத்திரன் விரைவில் அழைப்பதற்கோ?
மரணம் எதுவென உணரமுன்னே
மறலி வந்துனை அணைத்தானோ?
கண்ணைத் திறந்து மூட முன்னே
களத்தில் கதையை முடித்தானோ?
உள்ளம் நம்பிட மறுக்குதடா
உதடு உன் பெயர் சொல்லுதடா
நெஞ்சம் ஏங்கித் தவிக்குதடா
கனவே போல் தான் தெரியுதடா
பிரணவன் தனையே பிரார்த்திப்பாய்
பிறப்பென ஒன்று உண்டானால்
நிலைத்து வாழ்ந்திடக் கேட்டிடடா
நிம்மதித் துயில்' கொள்பவனே
கனவில் உன் முகம் தெரியுதடா
நிஜத்தில் மட்டுமேன் மறையுதடா

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

அல்லாரை தெற்கு,
கொடிகாமம்.

(39747)

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலராக: 24 - 10 - 1987



சருகாக: 31 - 12 - 1993

## அற்புதராசா திலீபன்

துள்ளித் திரிந்த தம்பி திலீபா,
பள்ளி செல்லும் நாளைப் பாத்திருந்தாயே,
உன் கள்ளச் சிரிப்பினைக் கண்டு
காலனும் தயங்கி நின்றான்,
கொடியவனும் கோழையாக புக்காரா உருவில்
உன் முன் வந்து நின்றான்.
மரணத்திலும், கதை பேசி சிரித்து நின்றவனே
வாழ்வில் எம்மை அழ வைத்தது ஏனோ?

உன்னை இழந்து தவிக்கும்:
அப்பா, அம்மா, அண்ணா,
சகோதரிகள்

மீனாச்சி அம்மன் கோவிலடி.
சங்கத்தானை.

கோழைத்தனமான வெறியாட்டத்தில் இவருடன் சாவினைத் தழுவிய ஏனைய 10 பொதுமக்களுக்கும் எமது அஞ்சலிகள்.

(39835)

## பலாலியில் 25 இளைஞர்கள் தடுத்து வைப்பு

கொழும்பு, டிச. 31

பலாலி முகாமில் தடுத்து வைக்கப்படடுள்ள பொதுமக்களில் 31 பேரை அரசாங்கம் அண்மையில் விடுவித்த பின்னரும் —

இன்னும் 25 தமிழ் இளைஞர்கள் பலாலியில் சிறை இருப்பதாக கூறப்படுகின்றது.

இந்த 25 பேரையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அண்மையில் பலாலி சென்று பார்வையிட்டனர் என கொழும்புபத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (உ)

## முற்பணம் வழங்க நிதி வரவில்லை

மந்திகை, டிச. 31

யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்களுக்கு ஒன்றரை மாதச் சம்பள முற்பணம் வழங்க சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியும்—

இன்னும் அந்த முற்பணம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

இடம் பெயர்ந்து இன்னல் படும் இந் நேரத்தில தமக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள முற்பணம் வழங்கப்படாததையிட்டு வைத்திய சாலை ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் இந்த முற்பணத்தை வழங்க தேவையான நிதி கொழும்பில் இருந்து இன்னமும் கிடைக்கவில்லை என்றும் —

கிடைத்ததும் வழங்குவதாகவும்— நிர்வாகம் தெரிவித்தது. (இ-3)

## புனரமைப்பில் ஓர வஞ்சனை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்த வருடம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள பாரிய புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பகுதிகள் சேர்க்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசமான வெல்லாவெளி, வவுணத்தீவு, வாகரை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று —

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் இந்தப் பகுதியே கூடுதலாகப் பாதிக்கப்பட்டது என்றும்—

புனரமைப்பு, புனர்வாழ்வுத்திட்டத்தில் இந்தப்பகுதிகளையும் சேர்க்கும்படியும்— மட்டக்களப்பு காந்திசேவா சங்கச் செயலாளர் கதிர். பாரதிதாசன் ஜனாதிபதிக்கு அனுப்பிய தந்தியில் கேட்டுள்ளார். (இ-3)

## ஜி.சி.ஈ. (சா.த.) விசேட பரீட்சை மார்ச்சில்?

வடபகுதிக்கான விசேட ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையை மார்ச் மாதத்தில்நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு செய்து வருவதாகவும் —

இதற்கான வினாத்தாள்களைத் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும்—

கொழும்பில் தெரிவிக்கப் பட்டது.

இம்மாத ஆரம்பத்தில் ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சை நாடெங்கும் நடைபெற்ற போதும் வடக்கில் [illegible]

பருத்தித்துறை பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

### 1996 ஆம் ஆண்டு

கிழ்க் குறிச்கப்பட்டுள்ள மாட்டிறைச்சிக் கடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் 02-01-1996 ஆம் திகதி செவ்வாய் காலை 12.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் குத்தகைக்கு கொடுக்கப்படும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரம்

1. மணற்காடு மாட்டிறைச்சிக்கடை
2. நாகர்கோவில் மாட்டிறைச்சிக்கடை

ஆ. சிவசுவாமி
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.
28- 12- 1995

(சி/3005)

## புத்தாண்டுத் திருப்பலிகள்

### புனித லிகோரியார் ஆலயம்

கச்சாய் வீதி, சாவகச்சேரி.

**01 - 01 - 1996**

காலை 6-30 மணி: 1 ஆவது திருப்பலி,
காலை 7-30 மணி: 2 ஆவது திருப்பலி,
காலை 10-30 மணி: 3 ஆவது திருப்பலி.

ஆகிய நேரங்களில் நடைபெறும்.

(19974)

## வாத்தியக் கருவிகள் தேவை

(உடுக்கு. ரபாண், தம்பரின்)

இவ்வகையான வாத்தியக் கருவிகள் விற்பனைக்கு இருந்தால் உங்கள் முகவரியுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளும் முகவரி:-
இல. 510,
C/O உதயன்,
சரசாலை

(39873)

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

### வினோ நகைப் பூங்கா

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது ஸ்தாபனம் தற்பொழுது புதிய அங்சாடி, பருத்தித்துறை வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்குகின்றது என்பதனை அறியத் தருகின்றோம்.

வினோ நகைப் பூங்கா
புதிய சந்தைக் கட்டடம்,
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(39878)

## உடன் சந்திக்கவும்

தெகிவளையில் வசிக்கும் திரு டாஸ் இன் மாமனாரான திரு. செல்லத்துரை அருமையா அவர்களை கீழ் காணும் முகவரியில் ஏனஸ்ட் தம்பிநாயகம் தேடுகிறார்.

C/o V. தர்மகுலசிங்கம்,
மடத்தடி வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(39879)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவன் ம. சதீஸ் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

### நாகபூசணி அம்பாள் மகேஸ்வரன்

(பூரணம்)

அவர்கள் 29 - 12 - 95 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

1ம் வருட மாணவர்கள்,
விஞ்ஞான பீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(39748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரும் கைதாகி விசாரணை

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு டிச. 31 மட்டக்களப்பு நகரின் மத்திய பகுதியான புளியந் தீவில் கடந்த வியாழன் அதிகாலை படையினர் நடத்திய சுற்றி வளைப்பின் போதும் சோதனையின் போதும் 13 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மத்தியவீதி, கிறீன் வீதி, புனித மிக்கேல்வீதி, பிரதான வீதி ஆகிய பகுதிகளில் வசித்த 13 வயதுக்கு மேற்பட்ட ஆண்களே புனித மரியாள் தேவாலயத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது,

நகரின் ஏனைய பகுதிகளில் நகரின் பிரதான குடியிருப்பாளரால் ஒப்படைக்கப்பட்ட படிவத்தின் அடிப்படையில் வீடுகளில் தங்கியிருந்தோர் சோதிக்கப்பட்டனர்.

அதிகாலையில் நகரினுள் நுழைவாயில்களான கோட்டை முனைப்பாலம் கோவிந்தன் வீதிப்பாலம், சுமைதாங்கிப் பாலம் என்பவற்றின் ஊடாக நகருக்குள் பிரவேசிக்க மக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

தேடுதலின் போது குடியிருப்பாளர் விவரப் பட்டியலில் உள்ளவர்களுக்கு மேலதிகமாக வீடுகளில் எவராவது தங்கி இருக்கிறார்களா என்று கடுமையாக விசாரிக்கப்பட்டது.

குடியிருப்பாளர் விவரப்பட்டியல் ஒவ்வொரு வீட்டு வாசல்களிலும் தொங்க விடப்பட வேண்டும் என்று படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

மட்டக்களப்பில்

## தபால்களை வாங்க அஞ்சும் மக்கள்!

மட்டக்களப்பு, டிச. 31

மட்டக்களப்பில் கடிதங்கள் மற்றும் பார்சல்களில் குண்டு வைத்து அனுப்பும் சம்பவங்கள் இடம்பெற்றதை அடுத்து மக்கள் தபால் விநியோகத்தர்களிடமிருந்து கடிதங்களைப் பெற அஞ்சுகிறார்கள் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தகைய குண்டு வெடிப்பு ஒன்றில் ரெலோ உறுப்பினர் ஒருவர் மூன்று விரல்களை இழந்தது தெரிந்ததே.

மற்றொரு சம்பவத்தில் பொலீஸ் அதிகாரிகள் இருவருக்கு அனுப்பப்பட்ட பார்சல் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டு செயல் இழக்க வைக்கப்பட்டன.

மணி அடித்ததும் வழமையாக ஓடிவந்து தபால்களை வாங்குபவர்கள் தற்போது தயக்கம் காண்பிப்பதாகவும் சிலர் வாங்க மறுப்பதாகவும் தபால் விநியோகிப்பவர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

புலிகளின் ஆயுதக் கடத்தல் தளம்:

## தாய்லாந்துக்குச் செல்லும் போது கதிர்காமர் பிரச்சினை எழுப்புவார்

கொழும்பு, டிச. 31

அந்தமான் கடலில்— தாய்லாந்தின் ஒதுக்குப்புறத் தீவுகளை— ஆயுதக்கடத்தலுக்கான தமது தளமாக தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுவதை—

அந்த நாட்டுக்குச் செல்லும் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அந்த நாட்டு அரசிடம் எழுப்புவார் என அறிவிக்கப்படுகின்றது.

தாய்லாந்து அரசுடன் உயர்மட்டப் பேச்சு நடத்துவதற்காக அமைச்சர் கதிர்காமர் இவ்வாரம் பாங்கொக் செல்லவிருக்கின்றார்.

தாய்லாந்து ஒதுக்குப்புறப் பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றனர் என்ற ஸ்ரீலங்கா அரசின் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு சான்றுகள் ஏதும் இல்லை என தாய்லாந்து இராணுவத்தின் பேச்சாளர் லெப்டினன்ட் ஜெனரல் றட்டானா கூறியிருந்தது தெரிந்ததே.

சிறிய ரக ஆயுதங்களைக் கடத்திச் செல்வதற்கு வசதியான இடமாக தாய்லாந்து ஒதுக்குப்புறப் பகுதிகளை புலிகள் பயன்படுத்துகின்றனர் என ஊகம் தெரிவிக்கப்படுவதாகவும்—

பெரும் பிரதேசத்தைக் கொண்டுள்ள தாய்லாந்து ஒதுக்குப்புறத்தில்— அங்கு முகாம் எதையும் வைத்திராத — விடுதலைப் புலிகளை தேடிக் கண்டுபிடிப்பது இலகுவான காரியமல்ல என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாகவும்—

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ)

## புலிகளின் காவலிலுள்ள படையினரை செஞ்சிலுவையினர் சந்தித்தனராம்!

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, டிச. 31

''சாகரவர்த்தனா'' ரோந்துக் கப்பலின் தளபதியான அஜித்போயாகொட மற்றும் ஒரு கடற்படை அதிகாரி உட்பட— விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள— ஸ்ரீலங்காப் படைகளைச் சேர்ந்த 26 துருப்பினரையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் கடந்த வாரம் சந்தித்துப் பேசினர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பேச்சாளர் கிருஷாந்தி வீரக்கோன் இதனை ஊர்ஜிதப்படுத்தியதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

இச்சந்திப்பு வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றதாக அறியவருகின்றது என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.

புலிகளால் தகர்க்கப்பட்ட ''சாகரவர்த்தனா'' ரோந்துக் கப்பலின் தளபதியையும்—

ஜானகபுர, பூநகரி, ஆனையிறவுத் தாக்குதல்களின் போது புலிகளிடம் பிடிபட்ட படையினரையுமே செஞ்சிலுவை அதிகாரிகள் சந்தித்ததாக அறிவிக்கப்பட்டது.

வலிகாமம் பகுதியை படையினர் கைப்பற்றிய பின்னர் புலிகளின் காவலில் உள்ள படையினரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் சந்தித்தது இதுவே முதல் தடவை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அம்பாறையில் மின்மாற்றிகள் சேதம்

கொழும்பு, டிச. 31

அம்பாறை மாவட்டத்தில் சொறிக்கல்முனை, சாவற்காடு ஆகிய இடங்களில் இரண்டு மின்மாற்றிகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

பொலீஸார் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மட்டக்களப்பில் மூளைக்காய்ச்சல் 10 பேர் பலி

சாவகச்சேரி, டிச. 31

மட்டக்களப்பில் பரவிவரும் வைரஸ், மலேரியா, மூளைக்காய்ச்சல் நோய்களால் இதுவரை 10 பேர் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கல்குடாப் பகுதியில் மட்டும் 5 பேர் இறந்தனர். (இ-3)


## ஆனையிறவு பகுதியில் தேடுதல்

கொழும்பு, டிச. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனையிறவுக்கு வடமேறகே ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வலிமுனை என்னும் இடத்தில் தேடுதல் வேட்டை நடவடிக்கையை படையினர் மேற்கொண்டனர் என்றும்—

அந்தப் பகுதியில் படையினர் இரு] அமுக்க வெடிகளை கண்டுபிடித்தனர் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | தாயக மடியில்: |
|---|---|
| 28 | 03 |
| — | — |
| 07 | 10 |
| — | — |
| 1970 | 1995 |

**கப்டன் எழிற்செல்வன் (பவான்)**

(கைலாயநாதன் சரவணபவான்)

ஈழம்தனை மீட்பதற்கு தலைவன் வழி சென்றீரே
கதிர்வீச்சு தாக்குதலில் களப்பலியானீரே
விழிசோரக் காத்திருந்து மூன்று திங்கள் ஆச்சுதையா
வீழ்கின்ற வித்தெல்லாம் விளைபயிராகும் கண்டீரே
விருட்சமாய் எம் நெஞ்சில் என்றுமே நிலைத்திடையா

31 - 12 - 95 (இன்று) நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா
அக்கா, அண்ணன்மார்.

தற்காலிக முகவரி
T. குணரத்தினம்
4 ஆம் ஒழுங்கை,
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

நிரந்தர முகவரி
க. கைலாயநாதன்
கட்டுவன்,
தெல்லிப்பளை.

(சி/3002)

## சத்தத்தோடு ஒரு சதிர்!

சன்னிக்கு ஆளானாள்
சாக்கடை நீர் தான்தெளித்து
மன்னிப்பாம் அக்காள்
முனகுகிறாள்
என்னப்பா —
தேரையா மன்னிக்கும்
திறல்வேங்கை பாவமென்று?
யாரையார் மன்னிப்ப தாம்?

அப்பன் விதைத்து விட்டான்
ஆத்தாளோ நீர்தெளித்தாள்
இப்பத்தான் பெட்டை
இடுங்குகிறாள்
அப்பப்பா —
ரத்தத்தைக் காட்டி
ரஸமென்று ஊர்முழுதும்
சத்தத்தோ டாடுகிறாள் சதிர்!

பிரஞ்சுப் புரட்சியிடும்
புதுமுட்டை தின்றுவந்து
உரஞ்சிக் 'கழிப்பதென்ன'
ஊர்ப்புறத்தே?
வெறுஞ்சுவரை
முட்டுங் குறுங்கழுதை
மூக்காலே பேசுகின்ற
கட்டுரைக்குச் சொத்தியனே காப்பு!

உயரத் தலை நிமிர்த்தும்
'ஈபலெனும்' கோபுரத்திற்
பெயரைப் பதித்து வந்த
பெரும் பூதம்
பெயரறிவாய் —
கணத்திற் பருந்தெழுந்து
காற்றுருவிப் போனாலும்
நிணத்தை நினைத்திருக்குமாம்!

— மதவடிச்சித்தர்

## பூநகரியில் குடிசைகள்

பூநகரி, டிச. 31

குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து பூநகரி வந்தோருக்கு குடிசைகள் அமைத்துக் கொடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக இந்த பிரதேச செயலர் பிரிவில் 190 குடிசைகளை அமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். தில்லைநடராசாவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரியாலை, நாகபடுவான் பகுதிகளில் 100 குடிசைகளும் நாச்சிக் குடாவில் 90 குடிசைகளும் கட்டிக் கொடுக்கப்படும்.

குடிசைகள் அமைப்பதற்கான இடம் சிரமதானம் [illegible] (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவனையில் உள்ள HONDA 70, HONDA CAREN (Ladies) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. திருநாவுக்கரசு இல: 111, சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி. (மக்கள் வங்கி முன்பாக)

(39710)

பஜாஜ் ஸ்கூட்டர், தினசரி 2 போத்தல் பால் எடுக்கக் கூடிய 3 மாத சினையுடன் கன்னி சாணன் இன ஆடு விற்பனைக்குண்டு. இ. நவரத்தினராசா, ஆடியன்பிட்டி ஒழுங்கை (யூனியன் பேக்கறி அருகில், யாழ்வீதி), சாவகச்சேரி.

(39866)

புதிய றொபின் நீர் இறைக்கும் இயந்திரமும், ஏசியா லுமாலா துவிச்சக்கர வண்டிகளும் விற்பனைக்குண்டு. வே. நடராசா, ஸ்ரீசண்முகானந்தா ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி.

(39871)

### இட மாற்றம்

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் பின் வீதியில் P. M. நடத்திய சோதிட நிலையம் பின்வரும் விலாசத்தில் தற்சமயம் இயங்குகின்றது. C/o. அ. பத்மநாதன், 'தீப வாசா', சியாமளா மில் ஒழுங்கை, மீசாலை. (புத்தூர் சந்திக்கு அருகாமை)

(39703)

44, சட்டநாதர் வீதி நல்லூர் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த ஆங்கில வைத்தியசாலை இடைக்குறிச்சியில் (வரணி ஆஸ்பத்திரி அருகில்) இயங்கி வருகின்றதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். டாக்டர் திருமதி ப. கனகசுந்தரம் (மாம்பழம்).

(39868)

### தாதிமார் தேவை

தனியார் வைத்தியசாலை களில் வேலைசெய்த அனுபவமுள்ள தாதிமார் தேவை. சான்றிதழ்களுடன் 3-1-96 (புதன்கிழமை) அன்று காலை 9-00 மணிக்கு நேரில் தொடர்புகொள்ளவும். யாழ் கிளினிக் சென்ரர், மந்திகை ஆஸ்பத்திரி முன்பாக மந்திகை.

(39739)

### வீடு தேவை

சாவகச்சேரியை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு அல்லது விலைக்கு தேவை. வாடகைக்கு அல்லது விற்க விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள். வீடியோ கலாமினி டச் றோட், சாவகச்சேரி.

(39726)

### சைக்கிள் மாறிவிட்டது

27-12-95 அன்று சாவகச்சேரி சந்தைக்கு அண்மையில் விடப்பட்ட ஏசியா பெண்கள் சைக்கிள் இல. 08AB-9472 தவறுதலாக மாறி எடுக்கப்பட்டுள்ளது. அதே இடத்தில் வேறு ஏசியா (பெண்கள்) இருந்தது. மாறி எடுத்தவர் எஸ். செல்வநாயகம், மே/பா C. பாலசிங்கம், ஊறெல்லை ஒழுங்கை, நுணாவில்மேற்கில் தொடர்பு கொள்ளவும்.

(29872)

---

சிவதொண்டன் சபையினரின்

## அறிவித்தல்

சிவதொண்டன் மாத சஞ்சிகையைப் பெற்று வரும் வாடிக்கைக்காரர்கள், தற்போதைய நாட்டின் நிலைமையைக் கருத்தில்கொண்டு, கீழ்வரும் முகவரிகளில் நேரடியாகத் தங்கள் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்:
சிவதொண்டன் சபையார்

முகவரி:
S. அருளானந்தன்
C/o T. வைத்திலிங்கம்
உசன்,
மிருசுவில்,
சாவகச்சேரி.

தகவல்: ஏ. தம்பு
முகவரி: து. சிவஞானம்
சிவதொண்டன்சபை
C/o சி. பொன்னம்பலம் மங்களேஸ்வரன்
உயிலம்பிட்டி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(39740)

---

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## 1996 ஆம் ஆண்டுக்கான
## கேள்வி அறிவித்தல்

9-12-95ஆம் திகதிய ''உதயன்'' பத்திரிகையில் வெளிவந்த எமது விளம்பரம் சார்பாக அறியத் தருவது.

16-1-1996 தொடக்கம் 31-12-1996 வரையிலான காலப்பகுதிக்கு வல்வெட்டித்துறை மாட்டிறைச்சிக்கடையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் மீளவும் கோரப்பட்டு விண்ணப்பம் இரு பிரதிகளில் 15-1-1996ஆம் திகதி காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி வைப்புப் பணமாக ரூ. 1000/-மும் படிவக் கட்டணமாக ரூ. 100/-ம் செலுத்துவதன் பேரில் 12-1-1996ஆம் திகதி நண்பகல் 12-00மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ந. ஞானவேல்
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
26-12-1995.

(சி-3006)

---

# பிறந்த நாள் வாழ்த்து

## ★ ஸ்ரீ. ஸ்ரீகுணேசன் ★

மீசாலையைச் சேர்ந்த ஸ்ரீராகவராஜன் - சுபத்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்ரீகுணேசன் தனது இரண்டாவது பிறந்த நாளை (31-12-1995) அன்று மீசாலையில் தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமி, அக்காமார், அண்ணா, தங்கைமார் மாவடி விநாயகர் அருள்பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

''பூஅகம்''
மீசாலை மேற்கு,
மீசாலை.

(39700)

---

# மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

**ரவி அன் ராஜ் ஆடையகம்**

இல. 77, பெரியகடை யாழ்ப்பாணம் — இல. 163, பிரதான வீதி பருத்தித்துறை

**மகளிர் கோட்டம்**

இல. 81, பெரியகடை யாழ்ப்பாணம் — இல. 163, பிரதான வீதி பருத்தித்துறை (ரஞ்சன் பூங்கா அருகில்).

(சி-2919)

---

# புலமைப் பரிசில் - 95

3-12-95 அரசாங்கம் நடத்திய (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நடத்தப்படாத) ஆண்டு 5 புலமைப்பரீட்சை வினாத்தாள்கள் இப் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

- ★ சிதம்பரப்பிள்ளை — நெல்லியடி,
- ★ சதா பொண்ஸ் — மாலுசந்தி.
- ★ நாவலர் — மந்திகை,
- ★ P. E. C. — புலோலி,
- ★ கமலா — பருத்தித்துறை,
- ★ ஆசீர்வாதம் — சாவகச்சேரி,
- ★ அருள்நாயகி — கொடிகாமம்,
- ★ லிங்கா — கிளிநொச்சி.

★ புலமைப் பரிசில் 95, 96 பிரிவுகளுக்கான இரு வேறு பயிற்சி வினாத்தாள்களை (விடைகளுடன்) 15-01-96 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வெளியீடு — BOND
யாழ்ப்பாணம்.

(39741)

---

# விசுவாசிகளே

31-12-95 இரவு விழிப்பு ஆராதனை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் 9-00 மணிக்கு நடைபெறும்.

**அசெம்லி ஒப் (G)கோட்**

யாழ்ப்பாணம், மானிப்பாய், எபனேசர் சபை
வட்டுக்கோட்டை.

(39864)

---

# பருத்தித்துறை நகராட்சிமன்றம்

## இறைச்சிக் கடைகளுக்கான 1996 ஆம் ஆண்டுக்குரிய

# மீள் கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில், 10-01-1996 ஆம் திகதி தொடக்கம் 31-12-1996 ஆம் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 09-01-1996 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் 08-01-1996 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் ''செயலாளர், நகராட்சிமன்றம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்; அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விவரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. மாட்டிறைச்சிக் கடை | ரூ. 1,43,440/- | ரூ. 1500/- | ரூ. 150/- |
| 02. ஆட்டிறைச்சிக்கடை | ரூ. 11,000/- | ரூ. 1500/- | ரூ. 150/- |

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
28-12-1995

(சி-3007)

---

# 16-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் வைத்திய கலாநிதி

## ஆறுமுகம் சசிகாந்தன் M.B.B.S.

யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவபீட விரிவுரையாளராக, யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியராக, உளவளத்துணை ஆலோசகராக, முழுநேர அர்ப்பணிப்புடன் எமது சமூகத்துக்கு அரும் பெரும் தொண்டாற்றிய பல்துறை அறிஞர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் சசிகாந்தன் அவர்களது 16 ஆம் நினைவு நாளான இன்று அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

சரோஜா சிவசந்திரன்
மகளிர் அபிவிருத்தி நிலையம்
யாழ்ப்பாணம்

சிற்றம்பலம் ஒழுங்கை,
மீசாலை வடக்கு,

(39745)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மூன்றம்ச நிலைப்பாடு

விடுதலைப் புலிகளின் இன்றைய அரசியல் நிலைப்பாடு குறித்து அதன் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சியில் நடந்த கூட்டம் ஒன்றில் விவரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த நிலையில். அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், அங்கு சிவில் நிர்வாகத்தைத் தொடங்கப் போவதாக அரசு கூறிவரும் நிலையில், தனது அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதாக கூறிவரும் நிலையில் —

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை திரு. பாலசிங்கம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

★ சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறுவதாயின் அது சர்வதேச மத்தியஸ்தத்துடனேயே நடைபெறவேண்டும்.

★ அவ்வாறு ஒரு பேச்சுவார்த்தை நடப்பதற்கு முன்னர் இராணுவம் தான் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேறவேண்டும்.

★ இடம்பெயர்ந்த மக்கள் தமது பகுதிகளில் மீளச் சென்று குடியேறிய பின்னரே பேச்சுவார்த்தை நடைபெற முடியும்.

இதுவே விடுதலைப் புலிகளின் மூன்றம்ச நிலைப்பாடு.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்று சந்திரிகா நிபந்தனை விதித்து வருகிறார்.

தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்று கிடைக்காமல் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கமாட்டார்கள்; வைக்கவும் முடியாது.

இது சந்திரிகாவுக்கும் தெரியும். பேச்சுவார்த்தையை நடத்தாமலிருப்பதற்காகவே, அதில் விருப்பமில்லை என்பதாலேயே அவர் அசாத்தியமான நிபந்தனை போடுகிறார்!

இத்தகைய ஒருவருடன் பேச்சுவார்த்தைக்குப் போவதானால் மத்தியஸ்தர் ஒருவரும் இருக்கவேண்டும்.

சென்ற தடவையும் பேச்சுவார்த்தை தடங்கலுற்றதற்கும் முறிந்து போனதற்கும் அரசின் அணுகுமுறையே காரணமாக இருந்தது.

ஆனால் பேச்சுக்கள் முறிந்தமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று பழி சுமத்தி சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்து உலக நாடுகளை நம்ப வைத்தார் சந்திரிகா.

இனிமேல் அப்படி ஒருநிலை ஏற்படாமல் தவிர்க்க, சர்வதேச மத்தியஸ்தம் அத்தியாவசியமே

இன்றைய சூழ்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று நடக்க வேண்டுமாயின் இராணுவ ஆக்கிரமிப்பு என்ற அழுத்தம் அகற்றப்பட வேண்டும். மக்களை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்திய நிலையில் நடக்கும் பேச்சுவார்த்தை அரசின் பக்கத்துக்குச் சாய்வதற்காகப் போடப்படும் எடையாகவே அமையும்.

அதேபோன்று, இடம் பெயர்ந்த மக்கள் தமது இடங்களில் மீளக்குடியமர வசதி செய்யப்பட்ட பின்னரே பேச்சுவார்த்தை நடக்கவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்தலை ஒரு காயாக நகர்த்தி பேரம் பேச அனுமதிக்க முடியாது.

ஆகையால் விடுதலைப் புலிகளின் மூன்றம்ச அரசியல் நிலைப்பாடு காலத்துக்கு உகந்ததும், நியாயமானதுமாகும்.

# உண்மை நிலையை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை நடத்தி வருகிறார்கள். எமக்கு முந்திய பரம்பரையினர் அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக காந்தி அடிகளின் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் அறவழிப் போராட்டங்களை நிகழ்த்தினர் அறவழிப் போரின் ஆன்மீகப் பண்பியல்பை சிங்கள இனவாத அரசு உணர்ந்து கொள்ளவில்லை; அதற்கு மதிப்பும் அளிக்கவில்லை. அகிம்சைப் போராட்டங்களை ஆயுத வன்முறையால் மிருகத்தனமாக நசுக்கியது. அறவழியில் — சனநாயக வழியில் — தொடுக்கப்பட்ட போராட்டங்கள் ஆயுத வன்முறையால் நசுக்கப்பட்ட நிலையில் இன அழிப்பு மேலும் தீவிரமடைந்தது. தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற இக்கட்டான வரலாற்றுக் காலகட்டத்தில் தான் விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழரின் ஆயுதப் போராட்டமும் தோற்றம் கொண்டன.

## 'பயங்கரவாதம்', 'பிரிவினைவாதம்' என விடுதலைப் போரை சித்திரிக்க முயற்சி

தன்னாட்சி உரிமைகோரித் தமிழீழத்தில் தோற்றம் கொண்ட ஆயுதப் போராட்ட வடிவத்தை, ''பயங்கரவாதம்'' என்றும் ''பிரிவினைவாதம்'' என்றும் சித்திரித்துவிடச் சிங்கள அரசு பகீரத முயற்சி செய்கிறது இத்தகைய தவறான கருத்து இந்திய மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தச் சித்திரிப்பில் எவ்வித உண்மையும் இல்லை. ஈழத்தமிழரின் போராட்ட வடிவத்தைத் திரிபுபடுத்தி, கொச்சைப்படுத்தும் நோக்கில் இவ்வித பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

நாம் ''பயங்கரவாதிகளும்'' அல்லர்; ''பிரிவினைவாதிகளும்'' அல்லர்; அன்றி ஆயுதக்கலாச்சாரத்தை வழிபடும் வன்முறையாளரும் அல்லர். நாம் ஓர் இலட்சியத்திற்காக, ஓர் உயரிய குறிக்கோளுக்காகப் போராடுகிறோம். இன அழிவிலிருந்து எமது இனத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாம் போராடுகிறோம். இனக்கொலை வடிவம் எடுத்துள்ள ஆயுத வன்முறைக்கு எதிராகவே நாம் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். உயிர் வாழும் உரிமைக்காக, உயிரைக் கொடுத்துப் போராடவேண்டிய ஒரு சிக்கலான — நெருக்கடியான — வரலாற்றுச் சூழலை நாம் எதிர்கொண்டு நிற்கிறோம். எமது இக்கட்டான நிலைமையை இந்திய மக்கள் — குறிப்பாகத் தமிழக மக்கள் —புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்.

## தன்னாட்சி உரிமை கோரும் தமிழரின் அபிலாஷையை புலிகள் வரித்தனர்

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்றதிலிருந்து மாறி, மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள, பௌத்த பேரினவாத அரசுகள் தமிழரை அரவணைத்து வாழவிரும்பாது, அடிமை கொண்டு ஆள விரும்பியதால் தமிழ் மக்கள் தமது அரசியற் தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்ள விரும்பினர். ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்ட இனம் என்ற ரீதியில் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். அதுவும், அரச ஒடுக்குமுறையானது இன அழிப்பு வடிவம் எடுத்த ஆபத்தான சூழ்நிலையில் தான் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்காகப் போராடத் துணிந்தார்கள். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தீவிரமடைவதற்கு முந்திய காலத்திலேயே தன்னாட்சிப் போராட்டத்திற்கான ஆணையை எமது மக்கள் பழைய அரசியற் தலைமைக்கு ஒப்படைத்தனர். எமது மக்களின் இந்த அரசியல் அபிலாசையையே எமது இயக்கம் தனது அரசியல் இலட்சியமாக வரித்துப் போராடி வருகிறது. தமிழீழத்தில், தன்னாட்சி உரிமைப் போராட்டம தோற்றம் கொண்ட வரலாற்றினையும் அதன் நியாயப்பாட்டையும் புரியாதவர்கள் எம்மைப் ''பிரிவினைவாதிகள்'' எனக் கற்பிக்க முனைகிறார்கள். இன அழிவுப் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திர மனிதர்களாக நிம்மதியாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ விரும்பும் எமது மக்களின் நியாயமான போராட்டத்தை ''பிரிவினைவாதம்'' எனச் சித்திரிப்பதும், அதைச் சில இந்திய மாநிலப் பிரச்சினைகளுடன் ஒப்புநோக்கிக் குழப்புவதும் தவறானதாகும்.

## தமிழர் தாயகத்தின் தனித்துவத்தை சீர்குலைக்கவே தீர்வுத் திட்டம்

எமது மக்களின் தனியரசுக் கோரிக்கைக்கு மாற்று வழியாக ஓர் உருப்படியான சுயாட்சித் திட்டத்தைச் சிங்கள தேசம் வழங்க முன்வரலாமென தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கையும் இப்பொழுது இழந்து போய்விட்டது. வரலாற்று ரீதியாக, பல நூற்றாண்டுகளாக தமிழர் வாழ்ந்து வரும் பிரதேசத்தைத் தமிழரின் தாயகமாக ஏற்றுக் கொள்ளச் சிங்கள தேசம் தயாராக வில்லை. இந்த அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில், காலம் காலமாகத் தமிழினம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறது. இவ்விவகாரத்தில் ஒப்பந்தங்களைச் செய்வதும் ஒப்பந்தங்களை மீறுவதும் தான் சிங்களவரிடமிருந்து தமிழர் கண்ட வரலாறு. இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும் இந்தக் கதிதான் நேர்ந்தது.

தமிழர் தாயகத்தின் புவியியல் தனித்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்து, தமிழரின் தேசிய வாழ்வைச் சிதறடிப்பதில் சந்திரிகா அரசு புதிய வரலாற்றுச் சாதனைகளைப் புரிந்து வருகிறது. சமாதானத்திற்கான போர் என்றும், தமிழரை விடுதலை செய்யும் படையெடுப்பு என்றும் உலகத்தின் கண்களில் மண் தூவிவிட்டு எமது வரலாற்றுத் தாயகத்தை ஆக்கிரமித்து வருகிறது. சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டமும் தமிழர் தாயகத்தின் புவியியல் கட்டமைப்பை மாற்றியமைப்பதையே அடிப்படை அம்சமாகக் கொண்டது.

அன்று தொட்டு இன்று வரை, பண்டாரநாயக்கா யுகத்திலிருந்து சந்திரிகாவின் ஆட்சி வரை, சிங்கள இனவாத அரசுகள், அமைதி வழிக்குப் பதிலாக, இராணுவ அடக்குமுறைக் கொள்கையையே கடைப்பிடித்து வருகின்றன. முந்திய அரசுகளை விடச் சந்திரிகாவின் அணுகுமுறை வித்தியாசமானது. அவர் மிகவும் சாதுரியமான முறையில் உலகத்தை ஏமாற்றி சமாதானத்தின் பெயரால் தமிழின ஒழிப்பைத் திட்டமிட்டு நடத்தி வருகிறார்.

## பேச்சு முறிவதற்கான புறநிலையை சந்திரிகா அரசே ஏற்படுத்தியது

சந்திரிகா அரசுடன் நாம் நடத்திய சமாதானப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன. இராணுவ அழுத்தங்களையும், பொருளாதார நெருக்குதல்களையும் தளர்த்தி, தமிழர் மாநிலத்தில் இயல்பு நிலையையும் சமாதான சூழ்நிலையையும் தோற்றுவிப்பதற்கு சந்திரிகா அரசு மறுத்தது; சர்வதேசக் கண்காணிப்புடன் நிரந்தரமான ஒரு போர் நிறுத்தத்தை செய்யவும் அரசு தயங்கியது; பகைமை நிறுத்தம் என்ற தற்காலிக உடன்பாட்டை செய்துகொண்டு இராணுவ இயந்திரத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது; யாழ்ப்பாண முற்றுகை[illegible] போக்குவரத்துப் பாதை ஒன்றை[illegible] மறுத்தது; சமாதான சூழலை உருவாக்குவதற்குப் பதிலாக இராணுவ மேலாதிக்க நலனுக்கே முதன்மை கொடுத்தது.

விடுதலைப் புலிகளுடன் நிகழ்த்திய பேச்சுக்களுக்கு அரசு எவ்வித முக்கியத்துவத்தையும் அளிக்கவில்லை. சாதாரண நிர்வாக அதிகாரிகளையே பேச்சுக்கு அனுப்பியது. உயர்மட்ட அரசியற் தலைவர்கள் எவரும் பேச்சுக்களில் கலந்து கொள்ளவில்லை. புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியபோது தனது தீர்வுத் திட்ட யோசனைகளை அரசு தெரியப்படுத்தவில்லை.

தமிழர் தாயகத்தை அங்கீகரித்து, ஒரு [illegible] முழுமையான சுயாட்சித் திட்[illegible] முன்வைத்தால் நாம் அதனைப் பரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர பரீட்சையின் முடிவு இன்று

கொழும்பு, டிச. 31

கடந்த ஒகஸ்டில் நடந்த ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி டிச. 31

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் புதிய கல்வி ஆண்டிற்காக எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

ஆண்டு ஒன்று தொடக்கம் 5 வரையான வகுப்புக்களை ஆரம்பித்து நடத்த அதிபர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியிருக்கும் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 5 வரை கல்வி பயின்ற மாணவர்கள் தமது இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் சேர்ந்து கல்வியைத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகள் ஆரம்பித்து ஒரு வாரத்தில் மாணவர்களின் வகுப்பேற்றல் பரீட்சைக்கான ஏற்பாடுகளை அதிபர்கள் மேற்கொள்வார்கள். (உ-3)

## மட்டக்களப்பில் தாக்குதல்!

சாவகச்சேரி, டிச. 31

மட்டக்களப்பில் இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கும்— நகரின் நுழைவாயிலான — கல்லடிப் பாலத்தில் வைத்து இராணுவ அதிகாரி ஒருவர் பயணம் செய்த வாகனம் மீது புலிகள் நேற்று குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இராணுவ வாகனம் பலத்த சேதத்துக்கு உள்ளானதுடன் இராணுவ அதிகாரி காயமடைந்தார்.

புலிகளின் தற்கொலைப் படையணி இத்தாக்குதலை நடத்தியதாக இலங்கை வானொலி கூறியது. (உ-3)

## நல்லூர் கோட்ட அதிபர்கள் கூட்டம்

சாவகச்சேரி, டிச. 31

நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான விசேட கூட்டம் நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என நல்லூர் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## ஒருவர் காயம்

கொழும்பு, டிச. 31

திருகோணமலையில் பள்ளிக்குடியிருப்பு என்ற பகுதியில் கால்நடையாக ரோந்து சென்ற பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் தாக்குதலை நடத்தினர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதலில் பொலீஸார் ஒருவர் காயமடைந்தார். (உ-3)

## குண்டு வீச்சில் சிறுமி பலி

நேற்று முன்தினம் மாலை 5. 15 மணியளவில் மன்னார் மாவட்டம் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் இரு யுத்த விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சுத்தாக்குதலில் அன்ரனீற்றா (6 வயது) என்ற சிறுமி கொல்லப்பட்டார். பன்னிரண்டு பொது மக்கள் காயமடைந்தனர்.

ஐந்து வீடுகளும் சேதமுற்றன. (உ- 3- 6)

புத்தாண்டை ஒட்டி

# பாதுகாப்பு ஏற்பாடு கொழும்பில் தீவிரம்!

## வெடி கொழுத்தவும் தடை!

கொழும்பு, டிச. 31

புத்தாண்டு தினத்தில் கொழும்பில் புலிகள் தாக்குதல்களை நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக கொழும்பிலும் மற்றும் இதர இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு தீவிரபடுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

புத்தாண்டு வேளையில் மக்கள் வானவெடிகள்கொளுத்தி மகிழும் நேரத்தில் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி புலிகள் வெடிகுண்டுகளை வெடிக்கவைக்கக் கூடும் என அஞ்சும் அரசு, புத்தாண்டு நாளில் மக்கள் வானவெடிகள் மற்றும் பட்டாசுகளை வெடிப்பதற்குத் தடை விதித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு கொழும்பில் ஆயுதப் படையினரினதும், பொலீஸாரினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் —

சோதனை நடவடிக்கையின்போது ஆயுதப்படையினருடன் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் —

வீதிகளில் செல்லும்போது அடையாள அட்டையை பொது மக்கள் எடுத்துச் செல்லுதல் நல்லது என்றும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

வாகனங்களில் செல்வோர் தமது வாகனம் சம்பந்தமான பத்திரங்களை தம்முடன் எடுத்துச் செல்லும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு காலி முகத்திடலிலும் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வரும் காலி முகத்திடலுக்கு செல்வதை பொது மக்கள் தவிர்த்துக் கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது.

## 2 கப்பல்கள் கொள்வனவு

ஸ்ரீலங்கா கடற்படை 75 கோடி ரூபா (150 லட்சம் அமெரிக்க டொலர்) செலவில் இரண்டு சக்தி வாய்ந்த கப்பல்களை ரஷ்யாவிடம் இருந்து கொள்வளவு செய்துள்ளது.

கடலில் தொலைவில் இருந்து தரையை நோக்கி தாக்குதல் நடத்த வசதியாக இக்கப்பல்களில் கனரக பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளனவாம்.

அடுத்தமாத இறுதிக்குள் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் இக் கப்பல்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் தேவையில்லை. —

மூன்றாவது தரப்பின் தலையீடின்றியே பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றல் அரசுக்கு உண்டு — என்று— பிரதி அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே கூறினார். (அ-6)

## ஐ.நா. செயலாளருக்கு யாழ்.பிரசைகள் குழு தந்தி

ஸ்ரீலங்கா அரச படைகள் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தும் ஆட்லறி ஷெல் வீச்சினால் ஏதுமறியா தமிழ் மக்கள் உயிரிழக்கின்றனர்.

இதனை உடனடியாக நிறுத்த வேண்டியதன் அவசியத்தை ஸ்ரீலங்கா அரசு உணர்வதற்கு நல்லுதவி வழங்குமாறு—

யாழ். பிரசைகள் குழு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு தந்தி ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்தது.

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகள் மீது ஆட்லறி ஷெல் வீச்சு நடத்தப்படுவதால் மக்கள் பீதியுற்று வன்னிப் பகுதிக்கு ஓடிச் செல்வதாகவும்—

ஏற்கனவே வன்னிக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் ஏதிலிகளாக இடம் பெயர்ந்துள்ளதாகவும்— அந்தத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


### புங்குடுதீவு - நயினாதீவு
### ப. நோ. கூ. சங்கம்
## அறிவித்தல்

எமது சங்க பாவனையாளர்களை பின்வரும் இடங்களில் தங்களது இலவச உலர் உணவுப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது 29பி, 30ஏ, 30பி முத்திரைகளுக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கான 3 ஆம் கட்டத்துக்கும் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முத்திரைக்கான பொருள்களை 06 - 01 – 96 க்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கிளைகள்

| கிளை இலக்கம் | இடம் |
|---|---|
| 01. | சாவகச்சேரி பொதுச்சந்தை மேல்மாடி |
| 02. | சாவகச்சேரி பொதுச்சந்தை மேல்மாடி |
| 03. | சங்கத்தானை இந்துக்கல்லூரி முன்பாக |
| 09. | மீசாலை பழைய ஸ்ரேசனடி |
| 05. | பொதுச் சந்தை — கொடிகாமம் |
| 07. | கெற்பெலி பண்டிதர் குடியிருப்பு |
| 17. | கெற்பெலி பண்டிதர் குடியிருப்பு |
| 06. | பளை பஸ்நிலையம் முன்பாக |
| 10. | மட்டுவில் தெற்கு |
| 12. | இயற்றாலை குடியிருப்பு, வரணி |
| 13. | தச்சன்தோப்புச் சந்தி |

கூட்டுறவு சேவையிலுள்ள,
பதில் பொதுமுகாமையாளர்.

(சி/2930)


# பேச்சு முறிவதற்கான...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலனை செய்வதாக கூறியிருந்தும் சந்திரிகா ஆட்சிப்பீடம் அதனைப் பொருட்படுத்தவில்லை. போர்க் கைதிகள் பலரை விடுவித்து நாம் எமது நல்லெண்ணத்தைக் காண்பித்தோம். ஆனால் சந்திரிகா அரசு தமிழ்மக்களின் சாதாரண வாழ்க்கைப் பிரச்சினைகளைக்கூட தீர்த்து வைக்க முன்வரவில்லை இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது சமாதான வழியில் புலிகளுடன் பேசித் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசுக்கு எவ்வித அக்கறையும் இருக்கவில்லை என்பதையே நாம் உணரமுடிந்தது. தமிழரின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஓர் உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க அரசு தயாராகவில்லை என்பதையும் நாம் உணரமுடிந்தது. இப்படியான சூழ்நிலையில் பேச்சுக்கள் அர்த்தமற்றதாக இழுபட்டபொழுது, நாம் காலக்கெடுக்களைக் கொடுத்து எச்சரித்தும் அரசு அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இதனால் பேச்சு முறிந்தது. பேச்சுக்கள் முறிந்து போவதற்கான புறநிலைகளையும் நிர்ப்பந்தங்களையும் சந்திரிகா அரசு உருவாக்கி விட்டு, புலிகள் மீது பழியைச் சுமத்தியது. புலிகள் சமாதானப் பாதையை விரும்பவில்லையென உலகத்திற்குப் பொய்களைக் கூறியது. ஆனால் உண்மையில் சந்திரிகா அரசுதான் சமாதானப் பாதையை விரும்பவில்லை.

# ஈழத்தமிழரின் துன்பியல் நிகழ்வை சிங்களவர் கொண்டாடுகின்றனர்

தமிழரைத் தனது நாட்டுப் பிரஜைகள் எனக்கூறிக்கொண்டு, தமிழர் மீது பெரும் படையெடுப்பு ஒன்றைச் சந்திரிகா அரசு நடத்தி வருகிறது. ஒரே களத்தில் முழுப்படைப் பலத்தையும் குவித்து தமிழரின் வரலாற்றுப் பெருமை மிக்க யாழ்ப்பாண நகரை ஆக்கிரமித்து அங்கு சிங்களத் தேசியக் கொடியைப் பறக்கவிட்டிருக்கிறது. இடம் பெயர்ந்து ஓடிய ஐந்து இலட்சம் தமிழ்மக்களின் கண்ணீர் படிந்த இந்த துன்பியல் நிகழ்வை சிங்கள தேசம் கொண்டாடி வருகிறது. போரில், தமிழ் இனம் தோற்கடிக்கப்பட்டது போல. கொழும்பில் வெற்றி விழாக்கள் நிகழ்கின்றன. தமிழரின் இனவுணர்வை இவ்விதம் புண்படுத்திவரும சிங்களப் பேரினவாதிகள் தமிழருக்கு நீதி வழங்குவார்கள் என நாம் கருதவில்லை.

# இன்று இரத்தம் வழியும் எமது மண் நாளை சுதந்திர பூமியாக மாறும்

நீண்ட காலமாக வீரம் செறிந்த ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி வரும் தமிழினம் சமர்களில் பின்னடைவுகளைக் கண்டு சளைத்துப் போவதில்லை. சாவும், அழிவும், இடம்பெயர்வும், அகதிவாழ்வுமாக பெரும் துன்பப்பளுக்களைச் சுமந்து நின்ற போதும் எமது மக்கள் உறுதி தளரவில்லை நாம் விடுதலையில் பற்றுக்கொண்டு, ஒன்றுபட்டு உறுதிகொண்டு நிற்கிறோம். இன்றைய பின்னடைவுகளை நாளைய வெற்றிகளாக மாற்றிவிட" நாம் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறோம். இன்று இரத்தம் வழிந்தோடும் எமது மண், நாளை, ஒரு சுதந்திர பூமியாக மாறும் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

# தமிழகத்திலிருந்து எமது மக்களை அந்நியப்படுத்துவதற்கு எதிரி சதி!

வெளியுலகத்திலிருந்து. உலகத்தமிழினத்திலிருந்து, எமது மூலவேர் ஆழவேரோடியிருக்கும் தமிழகத்திலிருந்து எமது மக்களை அந்நியப்படுத்தி அழித்துவிட எமது எதிரி சதி செய்த போதும், தமிழகம் எமது மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவும், அனுதாபமும் காட்டிவருவது எமக்குப் பெரும் தார்மீகத் தெம்பையும் மனவுறுதியையும் தருகிறது.

தமிழகத்தில் கிளர்ந்த உணர்வெளிச்சியின் தீவிர வெளிப்பாடாக அண்மையில் திருச்சியில், எமது போராட்டத்திற்கு ஆதரவாக ஓர் இளைஞன் தனக்குத்தானே தீமூட்டி எரித்து உயிர்நீத்துக்கொண்ட சம்பவத்தை அறிந்து நாம் மிகவும் கவலையும், வேதனையும் அடைந்தோம். அந்த இளைஞனின் தமிழினப்பற்றிற்கும் விடுதலை உணர்விற்கும் நாம் மதிப்பளிக்கும் அதேவேளை, இத்தகைய உயிர்த்தியாகங்கள் அவசியமற்றவை என்பதால் அதனைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழீழத்தில் தமிழின அழிப்புப் போரை தொடர்ந்து நடத்த சிங்கள இனவாத அரசு வெறிகொண்டு நிற்கிறது. இந்தச் சூழ்நிலையில், தமிழகம் எமக்காகத் தொடர்ந்தும் குரல்கொடுக்க வேண்டும்; எமது மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும். இன்றைய இக்கட்டான நிலையில், ஈழத்தமிழினம் இதனையே தமிழக [illegible] களிடமிருந்தும் எதிர்பார்த்து நிற்கிறது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### நாகமுத்து சுப்பிரமணியம்

கைதடியைச் சேர்ந்த திருமதி நாகமுத்து சுப்பிரமணியம் 30.12.95 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், முத்துக்குமாரசுவாமி (அதிபர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), செல்லத்துரை, சிவலிங்கநாதன், அழகம்மா, மனோன்மணி ஆகியோரின தாயாரும், திருச்செந்திநாதன், அமிர்தலிங்கம், சரஸ்வதி, இராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அவரின் இறுதிக் கிரியைகள் இன்று 31.12.95 கைதடி மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் பி.ப. 1 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
சு.முத்துக்குமாரசாமி
(மகன்)

ஆயத்தடி,
கைதடி மேற்கு.

(39749)

திருமதி
### மனோறஞ்சிதம் சிவராஜா

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொட்டடியில் வசித்தவருமாகிய திருமதி மனோறஞ்சிதம் சிவராஜா (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி) நேற்றுக் காலை (30 – 12 - 1995) சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் திரு தி. சிவராஜாவின் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீவெங்கடேசனின் அன்புத்தாயாரும், உரும்பராயைச் சேர்ந்த காலஞ்சென்ற (சட்டத்தரணி) திருமதி குகனேஸ்வரி சுப்பிரமணியத்தின் அன்புச்சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30 - 12 – 95) பிற்பகல் இரண்டு மணியளவில் மிருசுவிலில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

தகவல்:
தி. சிவராஜா (கணவன்)

54, படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

(39744)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 31-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org